Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

### Sessions Case No. 69 of 2025

### Deposition of P.W.3 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சரவணக்குமார் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of March 2026.

(A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை:**

நான் தற்போது தண்ணீர்பந்தல் பெரியசோழிபாளையம் அஞ்சல் கிராமத்தில் குடியிருந்து வழக்கறிஞராக செய்து வருகிறேன். ஆஜர் 1,2 எதிரிகளை எனக்கு தெரியும். இறந்து போன மனோஜ் மற்றும பிரியா ஆகியோரை எனக்கு தெரியும். மனோஜ் எனக்கு பங்காளி. இவ்வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். சம்பவம் 16.09.2024ம் தேதி இரவு 9 மணிக்கு தண்ணீர்பந்தலில் அம்மன் லேத் பட்டறை அருகே நடந்தது. சம்பவ சமயம் நான் தண்ணீர்பந்தலில் என் மனைவி நடத்தும் நல்லி புட்ஸ் கம்பெனி அருகே நின்று கொண்டு இருந்தேன். மனோஜ் மனைவி பிரியா கை குழந்தையுடன் என்னிடம் வந்து மனோஜ்க்கும் எனக்கு தகராறு ஏற்பட்டுள்ளது என்றும், என் பெற்றொருக்கு தகவல் சொல்ல வேண்டும் என்று சொல்லி எனது செல்போனை கேட்டார். என் செல்போனை வாங்கி அவரது பெற்றோரிடம் பேசினார். பின்பு, கைகுழந்தையுடன் அம்மன் லேத் பட்டறை அருகே போனார். அப்போது அவரது கணவரும் பிரியா பின்னாடியே சென்று சமாதானப்படுத்தி கொண்டிருந்தார். அவர்களுடன் மனோஜின் அம்மா மணிமேகலையும் வந்தார். நானும் அவர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்திற்கு

போய்விட்டேன். அங்கு ராமலிங்கம், சக்திவேல், நடராஜன், அய்யம்பெருமாள், செந்தில்குமார் மற்றும் சிலர் இருந்தார்கள். அப்போது இரவு 9.30 மணியளவில் TN 10 S 7062 என்ற வெள்ளை நிற ஆல்டோ காரில் பிரியாவின் அப்பா பொன்னுசாமி, அவரது சகோதரர் சுந்தரராஜன் மற்றும் அவரது உறவினர் சக்திவேல் ஆகியோர் வந்து எங்கள் அருகே காரிலிருந்து இறங்கினார்கள். இறங்கியவுடன் சுந்தரராஜன் மனோஜின் நெஞ்சில் கையால் குத்தினார். உடன்வந்த சக்திவேல் மனோஜை கையால் அடித்தார். பிறகு இருவரும் சேர்ந்து மனோஜை கீழே தள்ளிவிட்டார்கள். சுந்தரராஜன் "**உன்னோட இதே வேலையா போச்சு உன்னை அடித்து கொன்றால் தான் என் தங்கச்சிக்கு விடிவு காலம் பிறக்கும்**" என்று சொல்லி மனோஜை கீழே தள்ளி அவரும் சக்திவேலும் சேர்ந்து அவரது நெஞ்சில் எட்டி உதைத்தார்கள். சக்திவேல் "**சாவுடா**" என்று சொல்லி எட்டி உதைத்து அடித்தார். மனோஜின் அம்மா மணிமேகலை மனோஜை அடிப்பதை தடுத்த போது சக்திவேல் மணிமேகலையின் இடது கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டார். நாங்கள் சண்டையை விலக்க முற்பட்ட போது, சுந்தரராஜன் பட்டறையில் இருந்த ஒரு பைப்பை எடுத்து தடுத்தால் உங்களையும் அடித்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். நாங்கள் கீழே கிடந்த மனோஜை தூக்க போனபோது காரில் வந்த மூவரும் வந்த காரில் ஏறி போய்விட்டார்கள். அதன்பிறகு, என்னுடைய காரில் ஜேடர்பாளையத்தில் சிவசண்முகம் மருத்துவரின் மருத்துவமனைக்கு கூட்டி சென்றோம். அவர் மனோஜை பரிசோதித்து நாடித்துடிப்பு குறைவாக இருக்கிறது என்றும், உடனே நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போக சொன்னார். நாங்கள் மனோஜை நாமக்கல் எம்.எம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றதில் அங்கிருந்த மருத்துவர் பார்த்துவிட்டு நாமக்கல் GH க்கு கொண்டு போகுமாறு சொன்னார். உடனே நாங்கள் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மனோஜை நாமக்கல் GH –க்கு கொண்டு போனோம். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார். சம்பவத்திற்கு மறுநாள் காவல் ஆய்வாளர்

என்னிடம் விசாரித்தார். அதன்பிறகு, இந்திராணி என்ற காவல் ஆய்வாளரும் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

எனது வழக்கறிஞர் அலுவலகம் பரமத்தியில் உள்ளது. நாமக்கல் அரசு மருத்துவமனையில் வைத்து காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. என்னை சம்பவத்திற்கு மறுநாள் மாலை 6 மணியளவில் என் வீட்டில் வைத்து விசாரித்தார். நான் சொல்ல சொல்ல வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள். அதை என்னிடம் படித்து காட்டினார்கள். என்னுடைய வாக்குமூலத்தை பதிவு செய்தததை வீடியோ பதிவு செய்யவில்லை. என்னை முதலில் விசாரித்த பிறகு, சுமார் 3 நாட்கள் கழித்து எனது மனைவி அலுவலகத்தில் வைத்து காவல் ஆய்வாளர் இந்திராணி என்னை விசாரித்தார். அப்போது எனது வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள். அதை நான் படித்து பார்த்தேன். சம்பவம் நடந்தபோது, நல்லி புட்ஸ் நிறுவனத்திற்குள் என் மனைவி இருந்தார். என் மனைவியை இவ்வழக்கில் போலீசார் விசாரிக்கவில்லை. இவ்வழக்கில் சாட்சியான அய்யம்பெருமாள் நல்லி புட்ஸில் வேலை செய்யும் பணியாளர். அவர் என் மனைவி நிறுவனத்தில் வேலை செய்யும் விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. தேவையில்லை என்பதால் சொல்லவில்லை. பிரியா பஸ் ஸ்டாப்பிற்கு தான் குழந்தையை தூக்கி கொண்டு போனார் என்றால், பஸ் ஸ்டாப்பிற்கு எதிர்புறத்தில் சுமார் 100 அடி தாண்டி போனார். சம்பவம் நடந்த ரோடு கிழமேல் ரோடு. என் மனைவி நடத்தும் கடை ரோட்டிற்கு வடபுறம் உள்ளது. பஸ் ஸ்டாப் என் மனைவி நடத்தும் கடைக்கு கிழபுறம் உள்ளது. அம்மன் லேத் பட்டறை என் மனைவி கடைக்கு மேல்புறம் உள்ளது. எதிரிகள் காரில் எந்த ரோட்டில் எந்த திசையிலிருந்து வந்தார்கள் என்று போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. கார் நிறுத்திய இடம் பஸ் ஸ்டாப் ஆகும். நான் போலீசார் விசாரணையில் என்னிடம் போனை வாங்கி பேசிவிட்டு பிரியா லேத் பட்டறை பக்கம் போனதாக சொன்னேன். ஆனால் அந்த விவரத்தை

எனது வாக்குமூலத்தில் பதிவு செய்யவில்லை. நான் போலீசார் விசாரணையில் எதிரிகள் மனோஜை துரத்தி கொண்டு லேத் பட்டறை வரை வந்தார்கள் என்று சொல்லவில்லை. நான் போலீஸ் விசாரணையில் எதிரி சுந்தரராஜ் மனோஜை பார்த்து உனக்கு இதே வேலையா போச்சு உன்னை அடித்து கொன்றால் தான் என் தங்கச்சிக்கு விடிவு காலம் பிறக்கும் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் போலீஸ் விசாரணையில் மனோஜ் கீழே விழுந்தபிறகு, 2ம் எதிரி சக்திவேல் சாவுடா சாவுடா என்று சொல்லி அடித்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலீஸ் விசாரணையில் கீழே கிடந்த பைப்பை எடுத்து காட்டி கொன்றுவிடுவேன் என்று எங்களை மிரட்டியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து சாட்சி ராமலிங்கம் செல்போனில் டாக்டர் சிவசண்முகத்திற்கு போன் செய்தார். அப்போது நான் அருகில் இருந்தேன். சாட்சி ராமலிங்கம் போனில் மனோஜிற்கு விபத்தாகிவிட்டதாக டாக்டரிடம் சொன்னார் என்றால் சரியல்ல. என் பெயரையும், மனோஜையும் டாக்டருக்கு தெரியும். எங்களுடன் டாக்டரை பார்க்க ராமலிங்கமும் வந்திருந்தார். என்ன நடந்தது என்று டாக்டர் எங்களிடம் பொதுவாக கேட்டார். நாங்கள் நடந்ததை சொன்னோம். டாக்டர் சிவசண்முகம் மனோஜை பார்த்துவிட்டு **"விபத்து என்று சொன்னீர்கள்? ஆனால் அவரது உடம்பில் எந்த காயமும் இல்லையே"** என்று கேட்டார் என்றால் சரியல்ல. அதற்கு ராமலிங்கம் மனோஜீம் அவரது மச்சினரும் சிறு சண்டை போட்டு இருவரும் கீழே புரண்டார்கள் என்றும், நாங்கள் விலக்கிவிட்டோம் என்றும், மனோஜ் எழுந்து உட்கார்ந்து மீண்டும் கீழே சாய்ந்து விட்டார் என்றும் சொன்னார் என்று சொன்னால் சரியல்ல. நாமக்கல் எம்.எம் மருத்துவமனையில் மனோஜ் பற்றிய விவரத்தை சொன்னோம். அதை பதிவு செய்தார்களா என்று எனக்கு தெரியாது. சம்பவத்தை பற்றி சொன்னோம். நான் போலீசார் விசாரணையில் எனது காரின் மாடல் மற்றும் பதிவு எண்ணை சொல்லவில்லை. ஆஸ்பத்திரிக்கு என்னுடன் காரில் வேறுயாரும் வந்ததாக சொல்லவில்லை என்றால் நியாபகம் இல்லை. டாக்டர் சிவசண்முகத்திடம்

ராமலிங்கம் மனோஜை நெஞ்சில் குத்தியதாகவோ கீழே விழுந்த பிறகு, எட்டி உதைத்தாகவோ சொல்லவில்லை என்றால் முழு விவரத்தையும் சொல்லவில்லை. சுருக்கமாக சொன்னார். நாமக்கல் GH க்கு எத்தனை மணிக்கு போனோம் என்று போலீசாரிடம் சொல்லவில்லை. அங்கு என்னுடைய பெயரை கேட்டுஎழுதி கொள்ளவில்லை. சம்பவம் எப்படி நடந்தது என்று டாக்டர் மனோஜின் உறவினரிடம் கேட்டார். சம்பவம் பற்றி உறவினர்களால் சரியாக சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. ஆஸ்பத்திரியிலிருந்து புகார் கொடுக்க ஜேடர்பாளையம் காவல் நிலையத்திற்கு சம்பவத்தன்று இரவு சுமார் 1 மணிக்கு போனேன். புகாரை மணிமேகலை சொல்ல சொல்ல வேறு நபர் எழுதினார். நான் போலீஸ் விசாரணையில் காவல் நிலையத்திற்கு போனதாக சொல்லவில்லை என்றால் நியாபகம் இல்லை. 16.09.2024ம் தேதி இரவு 10 மணிக்கு பிரியா ஜேடர்பாளையம் காவல் நிலையத்தில் வழக்கு சம்பவம் பற்றி புகார் கொடுத்து அது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. என்னிடம் செல்போனை வாங்கியபோது, பிரியா உடலில் சொல்லிக்கொள்வது போல காயம் இல்லை. சம்பவ இடத்தில் கிடந்த இரும்பு கம்பியை எடுத்து மனோஜ் 1ம் எதிரி சுந்தரராஜ் தலையில் அடித்ததில் அவருக்கு வலது கண்ணிற்கு கீழ் காயமானது என்றும், உடம்பில் அடித்து காயமானது என்றால் சரியல்ல. 16.09.2024ம் இரவு 9 மணிக்கு பிரியா என் செல்போனை வாங்கி அவரது பெற்றோருடன் பேசியபிறகு நான் அந்த இடத்திலிருந்து போய்விட்டேன் என்றும், சம்பவ இடத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவம் எவ்வாறு நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் மனோஜை எந்த ஆஸ்பத்திரிக்கும் அழைத்து போகவில்லை என்றால் சரியல்ல. கண்உற்ற சாட்சி வேண்டும் என்பதால் நான் மனோஜை காரில் ஏற்றி சென்றதாக புகாரில் பொய்யாக வழக்கு ஜோடிக்கப்பட்டு அதனடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மனோஜின் உறவினர் மற்றும் வழக்கறிஞர் என்பதால் நாமக்கல் அரசு

மருத்துமவனையில் சம்பவத்திற்கு மறுநாள் மதியம் சுமார் 1 மணிக்கு நான் போலீசார், மற்றும் மருத்துவரிடம் கலந்து ஆலோசித்து புகார் ஜோடித்து அந்த புகாரை நான் எழுதி மணிமேகலையிடம் கையொப்பம் மட்டும் வாங்கி கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் இடத்தில் எனது வாக்குமூலம் தயாரிக்ககப்படவில்லை என்றும் , போலீசார் பின்னிட்டு எனது வாக்குமூலத்தை முன் தேதியிட்டு தயாரித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் போலீசாரிடம் என்னை எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 69 of 2025**

**Deposition of P.W.4 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. அய்யம்பெருமாள் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of March 2026.

(A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை:**

நான் தற்போது தண்ணீர்பந்தல் பெரியசோழிபாளையம் அஞ்சல் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் 1,2 எதிரிகளை எனக்கு தெரியும். இறந்து போன மனோஜ் மற்றும் அவரது மனைவி பிரியாவை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு தெரியும். நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன். 16.09.2024ம் தேதி இரவு 9.30 மணிக்கு தண்ணீர்பந்தல் பஸ் ஸ்டாப் அருகே அம்மன் லேத் பட்டறை அருகே சம்பவம் நடந்தது. நான் அப்போது தண்ணீர்பந்தல் பஸ் ஸ்டாப்பில் அருகில் உள்ள நல்லி புட்ஸ் நிறுவனத்தில் வேலை பார்த்து முடித்துவிட்டு வெளியே நின்று கொண்டிருந்தேன். அப்போது மனோஜ்ம் பிரியாவும் மனோஜின் அம்மாவும் தண்ணீர்பந்தல் பஸ் ஸ்டாப்பிற்கு சண்டை போட்டு கொண்டே வந்தார்கள். அவர்களை ராமலிங்கம், சக்திவேல், சரவணக்குமார், செந்தில்குமார், நடராஜன் ஆகியோர் அவர்களை சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அப்போது ஆல்டோ கார் ஒன்று வந்தது. அதிலிருந்து சுந்தரராஜன், சக்திவேல், பொன்னுசாமி ஆகிய மூவரும் இறங்கினார்கள். சுந்தரராஜ் ஓடிசென்று 50 அடி தூரத்தில் அம்மன் லேத்

பட்டறை அருகில் நின்று கொண்டிருந்த மனோஜை கையால் நெஞ்சில் குத்தினார். மனோஜ் கீழே விழுந்துவிட்டார். பின்பு, சக்திவேலும், சுந்தரராஜிம் சேர்ந்து மனோஜை காலால் உதைத்தார்கள். சமாதானம் பேசியவர்கள் பக்கத்தில்போவதற்குள் மனோஜ் மயக்கம் போட்டு விழுந்துவிட்டார். உடனே மூன்று பேரும் காரை எடுத்து கொண்டு வந்த வழியே போய்விட்டார்கள். பிறகு, சாட்சி சரவணக்குமார் காரில் மனோஜை ஏற்றிக் கொண்டு ஜேடர்பாளையம் சிவசண்முகம் டாக்டரிடம் கூட்டி சென்றார்கள். அந்த காரில் மனோஜிடன் சரவணக்குமார், சக்திவேல், ராமலிங்கம், நடராஜன் ஆகியோர்கள் போனார்கள். நாமக்கல் Gh-க்கு கொண்டு போன பிறகு வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக டாக்டர் சொன்னதாக சொன்னார்கள். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை தண்ணீர்பந்தலில் வைத்து விசாரித்தார். அதை வீடியோவாக பதிவு செய்தார்கள். இது சம்பந்தமாக பரமத்தி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலும் வாக்குமூலம் கொடுத்தேன்.

**(இந்நிலையில் இந்த சாட்சியின் 183 (5) BNSS ன் படியான வாக்குமூலம் சம்பந்தமாக முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 69 of 2025**

**Deposition of P.W.5 witness for Prosecution**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : திரு. செந்தில்குமார் | | Taluk | : |
| Father's/ Husband's Name | : | | Calling | : |
| Village | : | | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of March 2026.
(A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை:**

நான் நான் தற்போது தண்ணீர்பந்தல் பெரியசோழிபாளையம் அஞ்சல் கிராமத்தில் குடியிருந்து ரைஸ் மில் வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் 1,2 எதிரிகளை எனக்கு தெரியும். இறந்து போன மனோஜ் மற்றும் அவரது மனைவி பிரியாவை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு தெரியும். நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன். சம்பவம் 16.09.2024ம் தேதி இரவு 9.30 மணிக்கு என் ரைஸ் மில்லிருந்து 50 அடி தூரத்தில் அம்மன் லேத் பட்டறை அருகே நடந்தது. நான் அப்போது ரைஸ் மில் கேட்டிற்கு அருகே நின்று கொண்டிருந்தேன். மனோஜின் மனைவி பிரியா அவருடன் சண்டை போட்டு கோவித்து கொண்டு பஸ் ஸ்டாப்பிற்கு வந்தார். மனோஜ் அவருக்கு பின்னாலேயே சமாதானப்படுத்தி கொண்டே வந்தார். மனோஜின் அம்மாவும் அவருக்கு பின்னாலேயே வந்தார். அவரது உறவினர்களான ராமலிங்கம், சரவணன், சக்திவேல், நடராஜ் மற்றும் பலரும் அவர்களை சமாதானப்படுத்தினார்கள். அப்போது வெள்ளை நிற காரில் பிரியாவின் சகோதரர் சுந்தரராஜ், சக்திவேல் மற்றும் அவரது தந்தை ஆகியோர் அங்கு வந்தார்கள்.

அதன்பிறகு, சுந்தரராஜ் காரிலிருந்து இறங்கி வேகமாக சென்று மனோஜை கையால் நெஞ்சில் குத்தினார். சக்திவேலும் மனோஜை அடித்தார். மனோஜின் அம்மா அடிக்க வேண்டாம் என்று தடுத்தார். அவரை சக்திவேல் என்பவர் கன்னத்தில் அறைந்தார். உன்னை கொன்னால் தான் என் தங்கச்சி நல்லா இருக்கும் என்று சொல்லி சுந்தரராஜ் மனோஜை கீழே தள்ளிவிட்டு காலால் உதைத்தார். மனோஜ் மயக்கமான பிறகும், சுந்தரராஜ் உதைத்தார். அதன்பிறகு, சுந்தரராஜை அங்கிருந்தவர்கள் விலக்கிவிட்ட போது சுந்தரராஜ் அங்கிருந்த லேத் பட்டறை கம்பியை எடுத்து அவரது உறவினர்களை மிரட்டினார். அதன்பிறகு மனோஜை தூக்கி காரில் ஜேடர்பாளையம் ஆஸ்பத்திரிக்கு கூட்டி போனார்கள். மறுநாள் மனோஜ் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். இது சம்பந்தமாக மறுநாள் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். அதனை பெண் சார்பு ஆய்வாளர் வீடியோவாக எடுத்தார். இது சம்பந்தமாக பரமத்தி குற்றவியல் நீதிமன்றத்தில் நான் வாக்குமூலமும் கொடுத்தேன்.

**(இந்நிலையில் இந்த சாட்சியின் 183 (5) BNSS ன் படியான வாக்குமூலம் சம்பந்தமாக முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.

Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 69 of 2025

## Deposition of P.W.6 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. நடராஜன் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of March 2026.

(A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை:**

நான் தற்போது தண்ணீர்பந்தல் பெரியசோழிபாளையம் அஞ்சல் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் 1,2 எதிரிகளை எனக்கு தெரியும். இறந்து போன மனோஜ் மற்றும் அவரது மனைவி பிரியாவை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு தெரியும். நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன். சம்பவம் 16.09.2024ம் தேதி இரவு 9.30 மணிக்கு தண்ணீர்பந்தல் அம்மன் லேத் பட்டறை அருகே நடந்தது. நான் அப்போது வீட்டில் இருந்தேன். என்வீடு அந்த இடத்திலிருந்து 200மீ தூரத்தில் உள்ளது. இரவு 9.30 மணியளவில் மனோஜின் அம்மா எனக்கு போன் செய்து பிரச்சனையாக இருக்கிறது என்று வா என கூப்பிட்டார். நான் பைக் எடுத்து கொண்டு தண்ணீர்பந்தலுக்கு போனேன். ராமலிங்கத்திற்கு நான் போன் செய்து தகராறு நடப்பதை சொல்லி வர சொன்னேன். நான் போனபோது அவரது உறவினர்களான ராமலிங்கம், சரவணக்குமார், சக்திவேல், அய்யம்பெருமாள், செந்தில்குமார் ஆகியோர் இருந்தார்கள். நாங்கள் அவர்களை சமாதானப்படுத்தினோம். அப்போது வெள்ளை நிற மாருதி ஆல்டோ காரில் பிரியாவின் சகோதரர் சுந்தரராஜ், உறவினர் சக்திவேல் மற்றும் அவரது

தந்தை பொன்னுசாமி ஆகியோர் அங்கு வந்து இறங்கினார்கள். அதன்பிறகு, சுந்தரராஜ் காரிலிருந்து இறங்கி சென்று மனோஜை கையால் நெஞ்சில் குத்தினார். சக்திவேலும் மனோஜை குத்தினனார். பின்பு, **"சாவுடா, சாவுடா"** என்று சொல்லி எட்டி உதைத்தார்கள். மனோஜின் அம்மா என் மகனை அடிக்க வேண்டாம் என்று தடுத்தார். அவரை சக்திவேல் என்பவர் கன்னத்தில் அறைந்தார். மனோஜ் மயக்கமாகி விழுந்து விட்டார். பிறகு, டாக்டர் சிவசண்முகம் ஆஸ்பத்திரிக்கு ராமலிங்கம் போன் செய்தார். அதன்பிறகு மனோஜை தூக்கி சரவணக்குமார் காரில் ஜேடர்பாளையம் ஆஸ்பத்திரிக்கு கூட்டி போனோம். அங்கு அவரை டாக்டர் பரிசோதித்துவிட்டு நாமக்கல் Gh-க்கு கூட்டி போன சொன்னார்கள். அங்கிருந்து நாமக்கல் எம்.எம் ஆஸ்பத்திரிக்கு போனோம். அங்கு நாமக்கல் Gh-க்கு போக சொல்லிவிட்டார்கள். Gh-க்கு போனவுடன் டாக்டர் பரிசோதித்துவிட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். இது சம்பந்தமாக மறுநாள் காவல் ஆய்வாளர் தண்ணீர்பந்தலில் வைத்து என்னை விசாரித்தார். அதனை பெண் சார்பு ஆய்வாளர் வீடியோவாக எடுத்தார். இது சம்பந்தமாக பரமத்தி குற்றவியல் நீதிமன்றத்தில் நான் வாக்குமூலமும் கொடுத்தேன்.

(**இந்நிலையில் இந்த சாட்சியின் 183 (5) BNSS ன் படியான வாக்குமூலம் சம்பந்தமாக முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.